**அக்டோபர் – 06**


# TNPSC துளிகள்

- C.P.R. சுற்றுச்சூழல் கல்வி மையமானது (The C.P.R. Environmental Education Centre - CPREEC) சென்னை மாநகராட்சிப் பள்ளியின் ஆசிரியரான G. தங்கராஜ் என்பவருக்கு 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆசிரியர் விருதினை வழங்கியது.
  - கடந்த இருபதாண்டுகளாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஊட்டியமைக்காக இந்த விருது இவருக்கு வழங்கப்பட்டது.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான ஹர்ஷ வரதன் அகில இந்திய அளவில் அனைத்து 15 AIIMS நிறுவனங்களிலும் புதுச்சேரியின் ஜிப்மர் கல்வி நிறுவனத்திலும் 2020 ஆம் ஆண்டிலிருந்து இளங்கலைப் படிப்புகளான MBBS/BDS படிப்புகளில் மாணவர்கள் NEET மதிப்பெண்கள் மூலம் சேர்க்கப்படுவர் என அறிவித்துள்ளார்.
  - முன்னதாக அவை தேசிய முக்கியத்துவம் பெற்ற கல்வி நிறுவனங்களாக இருந்தமையால் அவை NEET தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு அவை தங்களது தேசிய அளவிலான நுழைவுத் தேர்வின் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை நடத்திடத் தகுதி பெற்றிருந்தன.
- திவால் மற்றும் நட்டக் குறியீடு 2016 என்ற குறியீட்டின் மாற்றியமைக்கப்பட்ட திருத்தத்தின் வரம்பிற்குள் வங்கி சாரா நிதியியல் நிறுவனங்களையும் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- நுண்கடன் நிதி நிறுவனங்களிடம் இருந்து அதிக அளவிலான நபர்கள் கடன்களைப் பெற்றிட இயலச் செய்திடும் ஒரு முயற்சியாக ஒரு நபரின் கடன் பெறுவதற்கான வரம்பை 1 லட்சத்திலிருந்து 1.25 லட்சம் வரையில் அதிகரித்திட இந்திய ரிசர்வ் வங்கி முடிவெடுத்திருக்கின்றது.
- இந்திய சுழற்பந்து வீச்சாளரான ரவீந்திர ஜடேஜா தனது 200வது டெஸ்ட் கிரிக்கெட் விக்கெட்டை வீழ்த்தி இச்சாதனையை மிக வேகமாக (44வது டெஸ்ட் போட்டி) அடைந்த இடதுகை பந்துவீச்சாளராக உருவெடுத்திருக்கின்றார்.
- உலக கற்றல் குறைபாட்டு விழிப்புணர்வு தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 4ம் தேதி அனுசரிக்கப் படுகின்றது. டிஸ்லெக்சியா எனப்படும் இது ஒரு கற்றல் குறைபாடு ஆகும்.
- கத்தாரின் கலீபா மைதானத்தில் நடைபெற்ற IAAF உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஒலிம்பிக் சாம்பியனான அமெரிக்காவின் தாலிலாஹ் முகமது 400 மீட்டர்கள் தடை ஓட்டப் போட்டியில் முந்தைய தனது சாதனையை மறுபடியும் முறியடித்திருக்கின்றார்.
  - அவர் தங்கப் பதக்கத்தை 52.16 விநாடிகள் என்ற சாதனை நேரத்தில் வென்றார்.
- மறைந்த வரலாற்று ஆய்வாளரான S. முத்தையா எழுதிய, தமிழ்நாட்டின் விளையாட்டுக் கலை பற்றிய நவீன வரலாறு குறித்து ஒரு விரிவான பார்வையை வழங்குகின்ற “தங்கத்திற்கான தமிழ்நாட்டின் ஆராய்ச்சி” என்ற புத்தகமானது வெளியிடப் பட்டிருக்கின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## தனியாரால் நிர்வகிக்கப்படும் மின்சாரப் பேருந்துகள்

- தமிழ்நாட்டில் விரைவில் இயக்கப் படவிருக்கும் அனைத்து 525 மின்சாரப் பேருந்துகளும் ஒரு தனியார் ஒப்பந்ததாரரால் சொந்தமாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட இருக்கின்றது.
- அவை மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படாது.
- இனிமேல் மாநில அரசால் நேரடியான கொள்முதல் இருக்காது.
- அதற்குப் பதிலாக ஒரு மொத்த மதிப்பு ஒப்பந்தம் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் இறுதியாக ஏலமெடுத்த ஒப்பந்ததாரருக்கும் இடையே கையெழுத்திடப்படும்.
- கலப்பு மற்றும் மின்சார வாகனங்களின் துரித உற்பத்தி மற்றும் ஏற்பு – II (Faster Adoption and Manufacturing of Hybrid and Electric Vehicles II – FAME II) என்ற திட்டமானது மாநிலப் போக்குவரத்துக் கழகத்திற்கும் இறுதியாக ஏலமெடுத்த ஒப்பந்ததாரருக்கும் இடையே ஒரு மொத்த மதிப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டுமென கூறுகின்றது.
- சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் உள்பட தமிழ்நாடானது எட்டு மாநிலப் போக்குவரத்துக் கழகங்களைக் கொண்டிருக்கின்றது.
- மின்சாரப் பேருந்துகளுக்கான இயக்கச் செலவு டீசல் பேருந்துகளை விட மிக குறைவான ஒன்றாக இருக்கின்றது. ஆற்றல் நுகர்வுச் செலவு டீசல் பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 25 ரூபாய் என்றும் மின்சாரப் பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 7 ரூபாய் என்றும் இருக்கின்றது.



| Tamil Nadu State Transport Corporation | Number of buses | Assured kilometres |
|---|---|---|
| Villupuram | 50 | 6 lakh |
| Salem | 50 | 7.2 lakh |
| Coimbatore | 200 | 7.84 lakh |
| Kumbakonam | 125 | 6.6 lakh – 7.2 lakh |
| Madurai | 100 | 7.2 lakh |

GOING GREEN: Interior of an electric bus that was flagged off by Tamil Nadu CM Edappadi K Palanisamy in August this year

SPECIFICATIONS

TWO MODELS
9-metre length
- Seating capacity | 32
- Standing capacity | 20

12-metre length
- Seating capacity | 40
- Standing capacity | 30

Successful bidder will supply one bus in each category for a one-week trial
Cost | ₹90 lakh - 1.7 crore
Range | 150-300 km for every charge

TIMELINE
Sale of tender | September 24
Pre-bid meeting | October 10
Last date for submitting bids and opening date | October 24

TN'S FIRST GROSS CROSS CONTRACT (GCC)
- There will be no outright purchase
- A Gross Cost Contract (GCC) will help govt understand technology better without risks

WHAT IS GCC?
- Bus will be owned by the operator (successful bidder) and not state transport corporation
- Bus will be operated by bidder's crew and not STC employees
- Agreement will be signed on routes and fares
- STC will collect ticket fares from passengers and pay the operator for every kilometre

KEY CHALLENGES
- Opposition from unions as reported in Andhra Pradesh and Telangana
- Enforcing the contract; getting STCs on board

# தேசியச் செய்திகள்

## பொதுக் கழிப்பிடங்கள் – கூகுள் வெளியீடு

- சுவச் பாரத் திட்டத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் தற்போது கூகுள் வரைபடங்கள் நாடு முழுவதிலும் 2300 நகரங்களில் இருக்கும் 57,000 பொதுக் கழிப்பிடங்களைப் பட்டியலிட்டு இருக்கின்றது.
- அந்நிறுவனம் மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தின நினைவை முன்னிட்டு இதனை அறிவித்திருக்கின்றது.
- கூகுள் வரைபடத்தில் பொதுக் கழிப்பிடங்களை இணைப்பது, ஆரம்பத்தில் 2016 ஆம் ஆண்டில் ஒரு சோதனை முயற்சியாக புது தில்லி, போபால் மற்றும் இந்தூர் ஆகிய நகரங்களில் தொடங்கி வைக்கப்பட்டது.
- கூகுள் நிறுவனமானது சுவச் பாரத் திட்டத்துடனும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்துடனும் இதற்காக கூட்டு சேர்ந்துள்ளது.

## முதல் தனியார் இரயில்

- இந்தியாவின் முதல் தனியார் இரயில் வண்டியான லக்னோ - டெல்லி தேஜாஸ் விரைவு இரயிலானது அக்டோபர் 05-ம் தேதி தனது வர்த்தக ரீதியிலான இயக்கத்தை ஆரம்பித்தது.
- நாட்டில் இந்திய ரயில்வே உணவுப் பிரிவு மற்றும் சுற்றுலாக் கழகத்தாலேயே (Indian Railway Catering and Tourism Corporation - IRCTC) முழுமையாக இயக்கப்படும் முதல் இரயில் வண்டியாக இது உருவெடுத்துள்ளது.
- முதல்முறையாக IRCTC ஆனது இந்த வண்டியில் பயணிக்கும் பயணிகளுக்கு 25 லட்ச ரூபாய் மதிப்புடைய ஒரு இலவசக் காப்பீட்டையும் வழங்குகின்றது.

## ஆடியோ ஒடிகோஸ் – சுற்றுலாத் துறை செயலி

- “பர்யதான் பார்வ் 2019” என்ற நாடு முழுவதுமான சுற்றுலாத் துறைக்கான திட்டத் துவக்கத்தின் இரண்டாவது நாளன்று, சுற்றுலாத் துறை அமைச்சகம் “ஆடியோ ஒடிகோஸ்” என்ற ஒலிக் கைபேசி வசதியை வெளியிட்டுள்ளது.
- இந்த வசதியானது இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற தளங்கள் உள்ளிட்ட 12 தளங்களுக்கு கிடைக்கின்றது.
- ஆடியோ ஒடிகோஸ் செயலி பயணத்தின் போது சுலபமான போக்குவரத்து வசதிக்காக அத்தளத்தின் ஒரு வரைபடத்தை அச்செயலியின் உள்ளே கொண்டிருக்கின்றது.
- இதன் பயன்பாட்டாளர்கள் அத்தளத்தின் கதைச் சுருக்கம், விரிவான வரலாறு மற்றும் டிஜிட்டல் முறையிலான தகவல்கள் போன்ற அதன் வரலாற்றின் பல்வேறு பதிப்புகளையும் கிடைக்கப் பெறுவர்.
- தங்களுக்கு விருப்பமான மொழி மற்றும் வரலாற்றின் பதிப்பில் ஒலிப் பதிப்பை அவர்களால் தேர்ந்தெடுக்க முடியும்.

## சர்பத்-தா-பாலா விரைவு ரயில் – 550வது குருபுராப்

- இரயில்வேத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் புதுதில்லி – லூதியானா நகரிடை

விரைவு வண்டியின் வரம்பிலிருந்து பஞ்சாப்பின் லோகியன் காஸ் வரையிலான விரிவாக்கத்தைத் துவக்கி வைத்துள்ளார்.

- அந்த அமைச்சகம் அந்த இரயில் வண்டிக்கு சர்பத்-தா-பாலா எக்ஸ்பிரஸ் என மறுபெயரிட்டு இருக்கின்றது.
- இந்தப் புதிய இரயில்வண்டி குருநானக் ஜியின் 550வது பிறந்த தினத்தை முன்னிட்டு சுல்தான்பூருக்குச் செல்லும் சீக்கிய யாத்திரீகர்களுக்குச் சேவையை வழங்கும்.
- தற்போது பாகிஸ்தானில் உள்ள நான்கானா சாகிப் என்ற இடத்தை அடுத்து முதல் சீக்கிய குருவின் வாழ்க்கையோடு முக்கிய தொடர்புடைய இடம் சுல்தான்பூர் லோதி இடமாகும்.
- இரயில் வண்டியின் பெயர் மனிதாபிமானத்தின் நன்மையை எடுத்துக் காட்டும் வகையில் குருநானக்கின் போதனைகளைப் பிரதிபலிக்கின்றது.

### புதுதில்லி – காத்ரா வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா புது தில்லி – காத்ரா ஆகியவற்றிற்கிடையேயான வந்தே பாரத் விரைவு இரயில் வண்டியை புது தில்லியில் துவக்கி வைத்தார்.
- காத்ரா என்பது ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் ரேசி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரமாகும்.
- இது ஜம்மு நகரத்திலிருந்து 42 கிலோ மீட்டர் தூரத்தில் வைஷ்ணவ தேவி என்ற புனித தளம் அமைந்திருக்கின்ற திரிகூடம் என்ற மலைகளின் அடிவாரத்தில் அமைந்திருக்கின்றது.
- இந்நகரத்தின் வழியாக பாணகங்கா நதி பாய்கின்றது.
- மிகுதியான இந்து யாத்திரீகர்கள் வைஷ்ணவ தேவி கோயிலுக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கின்ற வகையில் இந்த இரயில் சேவையானது சமயச் சுற்றுலாவிற்கு ஒரு உத்வேத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

### நாடோடி யானை XIV – இராணுவப் பயிற்சி

- இந்திய – மங்கோலிய நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியான நாடோடி யானையின் 14வது பதிப்பு அக்டோபர் 05-ம் தேதி தொடங்கியது.
- இப்பயிற்சி இமாச்சலப் பிரதேசத்தில் பாக்லோ என்னுமிடத்தில் அக்டோபர் 05-ம்தேதி முதல் 18-ம் தேதி வரை நடத்தப்படும்.
- இந்திய இராணுவம் ரஜபுத்னா ரைபிள்ஸ் படையைச் சேர்ந்த ஒரு படைப் பிரிவால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்டிருக்கின்றது.
- நாடோடி யானை – XIV என்பது ஐக்கிய நாடுகளின் ஆணைக்கிணங்க கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் படைகளுக்குப் பயிற்சி அளித்திடுவதில் நோக்கம் கொண்டிருக்கின்றது.

## பொருளாதாரச் செய்திகள்

### நிதிக் கொள்கை குழு – ஆய்வுக் கூட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை குழு முக்கிய வட்டி விகிதங்களில் குறைப்பை அறிவித்து இருக்கின்றது.

- இந்த காலண்டர் வருடத்தில் மட்டும் தொடர்ந்து ஐந்தாவது முறையாக மத்திய வங்கியானது ரெப்போ விகிதத்தை 25 புள்ளிகள் அளவிற்கும், ரிவர்ஸ் ரெப்போ விகிதத்தை 25 புள்ளிகள் அளவிற்கும் குறைத்து உள்ளது (100 புள்ளிகள் = 1 சதவிகிதம்).
- தற்போது ரெப்போ விகிதம் 5.15 சதவிகிதத்திலும் ரிவர்ஸ் ரெப்போ 4.90 சதவிகிதத்திலும் உள்ளது.
- ரிசர்வ் வங்கியானது நடப்பு நிதியாண்டின் வளர்ச்சி விகிதத்திற்கான கணிப்பை 6.9 சதவிகிதத்திலிருந்து 6.1 சதவிகிதத்திற்கு குறைத்து மதிப்பிட்டிருக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## முதல் மின்னணுக் கழிவு ஆய்வகம் – மத்தியப் பிரதேசம்

- போபால் மாநகராட்சிக் கழகமும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து நாட்டின் முதலாவது மின்னணுக் கழிவு ஆய்வகத்தை போபாலில் ஏற்படுத்திட கை கோர்த்து இருக்கின்றன.
- இந்த ஆய்வகம் 2016 ஆம் ஆண்டின் திடக் கழிவு மேலாண்மை விதிகளோடுப் பொருந்திப் போகும் வகையில் திட்டமிடப்பட்டு இருக்கின்றது.
- இது வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் இரண்டிலும் இருந்து வெளியிடப்படும் கழிவுகளைப் பிரித்தல், பதப்படுத்துதல் மற்றும் அக்கழிவுகளை அகற்றச் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளச் செய்திடும்.
- மின்னணுக் கழிவுகள் வீடுகள் வாரியாக சேகரிக்கப்படும் அல்லது நேரடியாக அந்த ஆய்வகத்தில் சிறு கட்டணம் வசூலிக்கப்பட்டுச் சேர்க்கப்படும்.

# முக்கிய தினங்கள்

## உலக விலங்குகள் தினம் – அக்டோபர் 04

- உலக விலங்குகள் தினம் என்பது விலங்குகள் உரிமை மற்றும் நலன் ஆகியவற்றின் செயல்பாட்டிற்கான ஒரு சர்வதேச தினமாகும்.
- இது வருடந் தோறும் அக்டோபர் 04ம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- விலங்கியல் நிபுணர் ஹெயின்ரிச் ஜிப்மர்மேன் ஜெர்மனியின் பெர்லினில் 1925 ஆம் ஆண்டு மார்ச் 24ம் தேதியன்று முதல் உலக விலங்குகள் தினத்தை அனுசரித்தார்.
- அதன் பிறகு விலங்குகள் புரவலரான அசிசி பிரான்சிஸ் என்பவரது நினைவு தினமான அக்டோபர் 04-ம் தேதிக்கு இது மாற்றப்பட்டது.




## இந்திய வனவுயிர் வாரம்: அக்டோபர் 02 – 08

- ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 02 மற்றும் 08 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட நாட்களில் இந்தியாவில் வனவுயிர் வாரம் அனுசரிக்கப் படுகின்றது.
- இப்பிரச்சாரத்தின் வருடாந்திரக் கருத்துருவானது விலங்குகளைப் பாதுகாப்பதை ஊக்குவித்தல் என்பதாகும்.
- வனவுயிர் வாரம் என்பது ஒரு உறுதியான நடவடிக்கை மூலம் வனவுயிர்களின் வாழ்வைப் பாதுகாப்பதைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்திடுவதற்கான ஒட்டுமொத்த லட்சியத்துடன் திட்டமிடப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★